ஆக்கம்: ஆசிரியை T.பேபி ஷாலினி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

# புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்

## குறிஞ்சித் தென்னவன் (1934 – 1998)

- இவர் நுவரெலியா மாவட்டத்தில் நோர்வூட் தென்மதுரை தோட்டத்தில் பிறந்தவர்.
- வாழ்ந்த காலம் (1934 – 1998)
- நாடகங்கள், பக்திப்பாக்கள் குறும்பாக்கள் என்பவை இவரது ஆக்கங்களாகக் கூறலாம்.
- இலக்கிய வித்தகர், கலாபூஷணம் என்பன இவருக்கு கிடைத்த விருதுகள்.
- இவருடைய கவிதைகளை குறிஞ்சித் தென்னவகவிச்சாரங்கள் எனும் தலைப்பில் தொகுப்பித்தவர் சாரல் நாடன் ஆவர்.
- இவர் தனது 11 ஆவது வயதிலேயே தோட்டத் தொழிலாளியாகப் பெயர் பதித்துக் கொண்டார்.
- அப்போது தான் அனுபவித்த வேதனைகளை மையப்படுத்தி கவிதைகளை எழுதத் தொடங்கினார்.
- சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இவரது கவிதைகள் பொழிபெயர்க்கப்பட்டன.

## புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம் எனும் கவிதையின் மையக்கருத்து

தோட்டத் தொழிலாளிப் பெண்களின் வேதனைகளும் அதிலிருந்து மீளத் துடிக்கும் அவர்களது வேட்கையும். (வேதனையும்)

## மலையாகத் தொழிலாளிப் பெண்களின் கடின உழைப்பு

- பனி காயும் முன்னர் குளிர் காற்றையும் பொருட்படுத்தாது சங்கு ஊது முன்னர் தளிரினை பறிக்கச் செல்லுதல்.
- விரல்கள் விறைக்க உடல் குளிரில் நடுங்க தளிர் பறித்தல்.
- மன வேதனையுடன் கூடிய எண்ணங்களுடன் கொழுந்து பறித்தல்.
- சிக்க வரும் நிறைசெடிகளை பக்குவமாக விலக்கி கொழுந்து பறித்தல்.

## பெண் விடுதலைப் பற்றிய கருத்துக்கள்

- சிக்கவைக்கும் அடிமைத் தலையினை தூக்கியெறிய வேண்டுமென எண்ணம் கொள்ளல்.
- பெண்களை மூடிய பேரிருளை இல்லாதொழித்தல்.
- அடிமைச் சிறையில் வைத்த எதிரிகளின் (கயவர்கள்) கொட்டத்தினை அடக்குதல் அதனை மலைக்குச் சமமான மன உறுதியினைக் கொண்டு போரிட முன்வருதல்.
- சாதி சமய வெறுப்பாடுகளை களைத்து பெண்கள் தாழ்ந்தவர்கள் என்ற தீய போக்கை இல்லாமலாக்கி, உலகத்தில் புது மாற்றம் படைத்து பெண் விடுதலை கீதத்தை பாடுதல்.
- போலித் தலைமையை இல்லாதொழித்தல், பொய் திரையினை கிழித்தல்.

## பெண் உரிமைச் சிந்தனைகள்

- பெண் கல்வி பேணுதல்.
- பெண் உரிமை பேசுதல்.
- பெண் எண்ணற்கரிய கலைகள் படைத்தல்.
- பெண்ணுக்கு தனி நீதி என்று பேசுவதை இல்லாதொழித்தல். (சம நீதி வேண்டும்)
- பெண்கள் புதுயுகத்தை படைத்தலும் மலையகப் பெண்கள் வாழ்வியலை உயர்த்துதலும்.

**இக் கவிதையில் இடம் பெறும் உவமையணிகள்**

1. தங்கத் தளிர் - தங்கம் போன்ற தளிர். (தேயிலைக்கொழுந்து)
2. வெண்டை விரல்கள் - வெண்டைக்காய் போன்ற விரல்கள்.
3. கெண்டை விழிகள் : கெண்டை மீன் போன்ற விழிகள்.
4. வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென மேலுறும் எண்ணங்கள் - வெட்டப்பட்ட செடியில் அரும்புகள் மீண்டும் வளர்ந்து தளிர் விடுவதை போல் அவர்களின் எண்ணங்களும் மீண்டும் மீண்டும் புதிதாய் எழுந்திட வேண்டும்.
5. குன்று நிகர்த்த மனவுறுதி - மனவுறுதியானது குன்று என்று அதாவது மலை போன்று உறுதியாக இருக்க வேண்டும்.

**உருவக அணி ..**

1. நெஞ்ச மேடை - நெஞ்சமாகிய மேடை
2. துன்ப ஒலி - துன்பமாகிய ஒலி

**கவிதையின் சிறப்புக்கள்**

- பெண் எதிர் நின்று (பெண்ணின் முன் நின்று) உரைப்பது போல கவிதை அமைந்திருத்தல்.
- அனுபவத்தின் வெளிப்பாடாக காணப்படுதல். (யதார்த்த நிலை சித்தரிப்பு)
- உணர்வு பூர்வமாக அமைந்திருத்தல்.
- புரட்சிகரமான சிந்தனைகளின் வெளிப்பாடாக இருத்தல். (பெண் விடுதலை, பெண் உரிமை)
- உவமை, உருவக அணி பயன்பாடு.
- எதுகை மோனைகளுடன் கூடிய சிறந்த ஓசைநயம்.

## வினாக்கள்

1. கவிதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

   I) மலையகத் தொழிலாளிப் பெண்களின் கடின உழைப்பு.
   II) விடுதலை வேட்கை.
   III) பெண் உரிமைச் சிந்தனைகள்.

2. கவிதையைச் சிறப்பிக்கும் பின்வரும் உத்திகளை உதாரணங்களுடன் எடுத்துக் காட்டுக.

   I) உவமை உருவகங்கள்.
   II) ஓசை நயம்.

3. "குறிஞ்சித் தென்னவன்" பற்றிய குறிப்பு எழுதுக.

4. 1934 - 1998 ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியின் காணப்பட்ட பெண்களின் நிலைக்கும் 21ம் நூற்றாண்டாகிய இன்றைய பெண்களின் நிலைக்கும் இடையிலான (அனைத்து தொழிலிலும்) வேறுபாடுகள் யாவை?

5. "இன்றைய பெண் தோட்டத் தொழிலாளர்கள்" எனும் தலைப்பிற்கு குறிஞ்சித் தென்னவனின் புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம் எனும் கவிதைப் பகுதி பொருந்துமாற்றிறை தெளிவு படுத்துக?